நாள்.20.02.2024

**அசல் வழக்கு எண். 109/2018**

<u>வா.சா.1- 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

வழக்கறிஞரிடம் வழக்கு பற்றி விவரம் சொன்னது அம்மாக்கன்னு தான் சொன்னார் என்றால் நாங்கள் இருவரும் தான் சொன்னோம். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்கறிஞரிடம் நான் விவரம் சொன்னேன் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கின் விவரம் தெரியும் என்று தான் சொல்லியுள்ளேன். நான் எந்த சர்வே எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் புல எண் 61/A1B2. தாவா சொத்தின் பழைய புல எண் 61A. அதன் மொத்தவிஸ்திரணம் எவ்வளவு என்றால் 60 குழி. 60 குழி எத்தனை செண்டு என்றால் தெரியாது. மேற்படி 60 குழி என்பது ராமசாமித்தேவர், மாணிக்கத்தேவர் மற்றும் நாராயணசாமி தேவர் ஆகிய மூவருக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்றால் அது பற்றி தெரியாது. ராமசாமித்தேவர், மாணிக்கத்தேவர் மற்றும் நாராயணசாமி தேவர் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் பார்த்தேனா என்றால் கிராம நிர்வாக அலுவலகத்தில் நான் பார்த்தபோது ராமசாமித்தேவர், மாணிக்கத்தேவர் மற்றும் நாராயணசாமி தேவர் ஆகியோர்கள் பெயரில் ஏதும் இல்லை. நவனிதம், ருக்மணியம்மாள், அம்மாக்கன்னு பாப்பா, ஜெயலட்சுமி மற்றும் செல்வம் ஆகியோர்கள் பெயர் உட்பிரிவு செய்வதற்கு முன்பாக இருந்ததை நான் பார்த்தேன். கிராம நிர்வாக அலுவலகத்தில் நான் என்ன ஆவணத்தை பார்த்தேன் என்றால் சிட்டாவை பார்த்தேன். நான் பார்த்த சிட்டா UDR சிட்டாவா அல்லது நத்தம் சிட்டாவா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் RSR வாங்கி பார்க்கவில்லை என்றால் பார்க்கவில்லை. RSR யை பார்த்தால் ராமசாமித்தேவர், மாணிக்கத்தேவர் மற்றும் நாராயணசாமி தேவர் ஆகியோர்கள் பெயர்கள் இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. RSR ல் ராமசாமித்தேவர், மாணிக்கத்தேவர் மற்றும் நாராயணசாமி தேவர் ஆகியோர்கள் பெயர்கள் உள்ள விவரம் எனக்கு தெரியும் என்றும், அதை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குரை பாரா 2ல் ராமசாமித்தேவர், மாணிக்கத்தேவர் மற்றும் நாராயணசாமி தேவர் ஆகியோர்களுக்கு பழைய புல எண் 61/A1 ல் பூர்விக மனைக்கட்டு இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது,

ஆனால் அதன் விஸ்திரணம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி புல எண் 61/A1ல் உள்ள சொத்தை ராமசாமித்தேவர், மாணிக்கத்தேவர் மற்றும் நாராயணசாமி தேவர் ஆகியோர்களின் வாரிசுகள் எவ்வாறு பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்ற விவரம் சொல்லப்படவில்லை. எனது தாயார் யாருடைய வாரிசு என்றால் மாணிக்கத்தேவர். புல எண் 61/A1ல் மாணிக்கத்தேவருக்கு எவ்வளவு வீதம் என சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை. அதேபோல் ராமசாமித்தேவர்,நாராயணசாமித் தேவர் ஆகியோர்களுக்கும் எவ்வளவு வீதம் என சொல்லப்படவில்லை. ராமசாமித்தேவர், மாணிக்கத்தேவர் மற்றும் நாராயணசாமி தேவர் ஆகியோர்கள் பாகம் பிரித்துக் கொண்டார்களா அல்லது அவர்களின் வாரிசுதாரர்கள் பாகம் பிரித்துக் கொண்டார்களா என்ற விவரம் வழக்குரையில் சொல்லப்படவில்லை. புல எண் 61/A1 ல் ராமசாமித்தேவர், மாணிக்கத்தேவர் மற்றும் நாராயணசாமி தேவர் ஆகியோர்களுக்கு எவ்வளவு சொத்துகள் என்றால் தெரியாது. எனது குடியிருப்பிற்கு மேல்புறம் தென்வடலாக ரோடு உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி தென்வடல் ரோட்டிற்கு கீழ்புறம் நவனிதம் என்பவரின் வீடு உள்ளதா என்றால் சரிதான். அதற்கு அடுத்த கீழ்புறம் மாணிக்கம் என்பவரின் மகள் ஜெயலட்சுமி வீடு உள்ளது. அதற்கு அடுத்த கீழ்புறம் எனது அம்மா அம்மாக்கன்னு என்பவரின் வீடு ராமசாமித்தேவர், மாணிக்கத்தேவர் மற்றும் நாராயணசாமி தேவர் ஆகியோர்கள்உள்ளது. மேற்படி நவனிதம், ஜெயலட்சுமி என் தாயார் அம்மாக்கன்னு ஆகியோர்கள் குடியிருந்து வரும் 3 வீடுகளுக்கு உள்ளடக்கிய சர்வே எண் தெரியுமா என்றால் புல எண் 61/A1. மேற்படி 3 வீட்டின் மொத்த பரப்பளவு தெரியுமா என்றால் தெரியாது. எனது வீட்டிற்கு அடுத்த கீழ்புறம் யாருக்கு சொந்தமான வீடு உள்ளது என்றால் எனக்கு சொந்தமான கொல்லை உள்ளது. அந்த கொல்லையின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நவனிதம், ஜெயலட்சுமி என் தாயார் அம்மாக்கன்னு ஆகியோர்கள் குடியிருந்து வரும் வீட்டிற்கு தென்புறம் யாருக்கு சொந்தமான இடம் உள்ளது என்றால் லட்சுமணன் என்பவர் குடியிருந்து வருகிறார். அதன் புல எண் தெரியுமா என்றால் தெரியாது. நவனிதம், ஜெயலட்சுமி என் தாயார் அம்மாக்கன்னு ஆகியோர்கள் குடியிருந்து வரும் வீட்டிற்கு வடபுறம் யாருடைய சொத்து உள்ளது என்றால் காசிநாத தேவர் அவரது மனைவி அல்லியம்மாள் ஆகியோர்களின் வீடு உள்ளது. வடபுறம் உள்ள சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. புல எண் 61/A1 வாதி, 1 முதல் 4 எதிர்வாதிகளுக்கு பாத்தியப்பட்டதா

என்றால் சரிதான். தாவா புல எண்ணிற்கும் நாங்கள் குடியிருக்கும் இடத்திற்கு வடபுறம், தென்புறம், கீழ்புறம் உள்ள புல எண்களுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். புல எண் 61/A1 யை எந்த வருடம் யார், யார் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் தெரியாது. புல எண் 61/A1 ராமசாமித்தேவர், மாணிக்கத்தேவர் மற்றும் நாராயணசாமி தேவர் ஆகியோர்கள் மற்றும் அவர்களின் வாரிசுகளுக்கு சொந்தமானது என்றால் சரிதான். மேற்படி புல எண்ணில் ராமசாமித்தேவர், மாணிக்கத்தேவர் மற்றும் நாராயணசாமி தேவர் ஆகியோர்களுக்கு சம பாகம் என்றால் தெரியாது. மேற்படி ராமசாமித்தேவர், மாணிக்கத்தேவர் மற்றும் நாராயணசாமி தேவர் ஆகியோர்களுக்கு எவ்வளவு பாகம் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நாராயண சாமி தேவரின் மகன் கோவிந்தராஜ் என்பவரிடமிருந்து எனது தாயார் அம்மாக்கன்னு என்பவர் 30 குழியை கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். 30 குழியானது நாராயண சாமி தேவரின் மகன் கோவிந்தராஜ் என்பவருக்கு சொந்தம் என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை , 17.01.1986-ல் எனது தந்தை எனது அம்மா பெயரில் கிரயம் வாங்கினார். எனது தாயாரிடம் நாராயண சாமி தேவரின் மகன் கோவிந்தராஜ் -க்கு 30 குழி சொந்தமானது என்பது பற்றி கேட்டேனா என்றால் நான் கேட்கவில்லை. நான் என் தாயாரிடம் குடியிருந்து வரும் புல எண்ணில் நமக்கு எவ்வளவு சொந்தமானது என கேட்டேனா என்றால் கேட்கவில்லை. நவனிதம் என்பவருக்கு எவ்வளவு சொந்தமானது என்ற விவரம் பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எங்கள் தரப்பில் தாவா புல எண்ணில் யார் யாருக்கு எவ்வளவு சொந்தமானது என்ற விவரம் தெரியும் என்றால் எனது தாயார் மற்றும் எனது சின்னம்மா ஆகியோர்களுக்கு தெரியாது. நான் நீதிமன்றத்தில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து மொத்த சொத்து எவ்வளவு என அளக்க முயற்சி செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தின் பூஸ்துதியை மட்டும் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார். 1984 ல் நான் எங்கு இருந்தேன் என்றால் சென்னையில் இருந்தேன். 1984-ல் UDR பட்டாவில் தாவா புல எண்ணிற்கு மொத்த விஸ்திரணம் எவ்வளவு என தெரிந்து கொண்டேனா என்றால் தெரியாது. 1994 ம் ஆண்டு எங்கு வசித்து வந்தேன் என்றால் சென்னையில் வசித்து வந்தேன். என் தாயார் ஊரில் தான் இருந்தார் என்றால் இல்லை என்னுடன் சென்னையில் தான் வசித்து வந்தார். நத்தம் நிலவரி திட்டத்தில் வழங்கப்பட்ட பட்டாவை பார்த்தேனா என்றால் இல்லை. என்னிடம்

காட்டப்படும் வா.சா.ஆ.2 -யை நான் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் உள்ள விவரங்கள் எல்லாம் சரிதான். வா.சா.ஆ 2 என்பது நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ 2 ல் மொத்த விஸ்திரணம் 8 ஏர்ஸ் என போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் குடியிருந்து வரும் சொத்தின் மொத்த விஸ்திரணம் 20 செண்டு (8 ஏர்ஸ்) என்றால் சரிதான். தாவா புல எண்ணின் மொத்த விஸ்திரணம் 20 செண்டு (8 ஏர்ஸ்) (60 குழி) என தெரிந்தும் தெரியாததுபோல் பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கு புல எண்ணில் 60 குழி என்று சரியாக தான் சொல்லியுள்ளேன்.

**1-ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,

District Munsif, Pattukkottai.